I.P No. 06/2015
Dated : 21-2-2023

Time: 12.38 pm to 12.51 pm

P.W. - 1 சாட்சி நல்லுசாமி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2-ம்பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

கடன் கொடுத்த சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரர் ரிக்வண்டி வைத்திருந்தார் விவசாயம் செய்து வந்தார்.ரிக் வண்டி என்றால் குறைந்தது ரூ 20 லட்சம் இருக்கும் என்றால் சரிதான். அந்த வண்டியை எப்போது விற்றார் என்ன ஆனது என்ற விவரம் எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை வண்டி பற்றிய விவரம் எனக்குதெரியாது. எதிர் மனுவின் விவரத்தை நான் தெரிந்துகொண்டேன். அதில் 1 ம் எதிர்மனுதாரருக்கு ரூ 30 லட்சம் பொறுமானம் உள்ள வண்டி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குதெரியாது. எனக்கு பணம் வராததால் இம்மனு தாக்கல் செய்துள்ளேன்.

2) மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றும் அதை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலேயே சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் அவருடைய சொந்த ஊரான கீரிப்பட்டியில் தான் இருக்கிறார் என்றால் நான் சென்ற போது அவர் அங்கு இல்லை. ஆனால் நேரடியாகவும் அவரிடம் கீரிப்பட்டியில் பணம் கடையில் வைத்து கேட்டேன். மேற்படி கீரிப்பட்டி முகவரியில்தான் அவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் நான் போகும்போது அவர் இல்லை. அவர் குடும்பத்தாரும் அங்கு இல்லை.

3) 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நான் பணம் பெற தனிப்பட்ட தாவா தாக்கல் செய்யவில்லை. மேற்படி பணம் வசூலிக்க வேண்டும் என்றால் நான் 1 ம் எதிர்மனுதாரருககு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் ஆனால் தற்போது அவருடன் சேர்ந்து கொண்டு 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு விற்ற சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது தவறு.

(1 ம் எதிர்மனுதாரருக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பும் பொருட்டு குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- Ananthan**
**Subordinate Judge,**
**Attur.**